# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 56/மா/2022**
**நாள் : 07.06.2022**

திரு. B. விஜயகுமார், சென்னை– 81.
திரு. M. அன்பரசன், சென்னை – 21. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் மற்றும் சென்னை, கொருக்குப்பேட்டை, ஜீவா நகர், 16வது தெரு எண்.309 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. அன்பரசன் ஆகியோரது 19.05.2022 நாளிட்ட மனு 23.05.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 56/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

"சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் மற்றும் சென்னை, கொருக்குப்பேட்டை, ஜீவா நகர், 16வது தெரு, எண்.309 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. அன்பரசன் ஆகியோரது 19.05.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் 22.03.2022 அதிகாலை 1.00 மணியளவில் பழமையான அரசமரம் ஒன்றின் கிளை அதன் அருகே இருந்த ஒடு வீட்டின் மீது விழுந்துவிட்டது. இந்த வீட்டில் உறங்கி கொண்டிருந்தவர்கள் நூலிழையில் உயிர் தப்பினர். மேலும் இங்கே அங்கன்வாடி மழலையர் பள்ளி உள்ளது. அதில் குழந்தைகள் வசிக்கின்றனர். பலமுறை மாநகராட்சியில் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இம்மனு வாயிலாக தெளிவுப்படுத்த வேண்டிய விஷயம் என்னவென்றால் ஒடிந்து விழுந்த அரச மரத்தின் கிளையை அப்புறப்படுத்தி அந்த பால்வாடி மீது பல குப்பைகளும் அந்த குப்பையில் இருந்து கொசுக்கள் அதிகமாக உள்ளது. மாநகராட்சி "இந்த விஷயத்தில் உடனடியாக மரக்கிளையை அப்புறப்படுத்தி, மேலும் அந்த பகுதியை சுத்தப்படுத்தி தருமாறு சென்னை மாநகராட்சி ஆணையாளரை கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு 25.05.2022 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டார். மண்டல அலுவலர், மண்டலம்–4 அவர்கள் தனது 1.6.2022 நாளிட்ட அறிக்கையில் :

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 4, திரு. பி. விஜயகுமார் மற்றும் எம். அன்பரசன் ஆகியோரது மேல்முறையீட்டு மனுவில், எண்.309, ஜீவா நகர் 16வது தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை – 600 021 என்ற முகவரியில் உள்ள சாலையின் அருகே பழமையான அரசமரத்தின் கிளை விழுந்துவிட்டது என்றும், அங்கு அங்கன்வாடி மழலையர் பள்ளி உள்ளது எனவும் இந்த புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புகார் மனுக்களில் குறிப்பிட்டுள்ள இடம் இளநிலை பொறியாளர் மூலம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் மூலம் 22.03.2022 அன்று விரைந்து உடைந்த மரக்கிளைகள் அகற்றப்பட்டன. மேலும், சுற்றியுள்ள மரக்கழிவுகள் (ம) குப்பைகள் முழுவதும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டது என்று தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், இந்த அரசமரம் தனியார் இடத்தில் உள்ளது என்று தங்களின் கனிவான பார்வைக்கு சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது. " என்று தெரிவித்துள்ளார்.

2) இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 1.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 25.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) முறையீட்டு மனுதாரர்கள் 01.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :

"சென்னை கொருக்குப்பேட்டை, ஜீவா நகர் 16வது தெருவில் உள்ள அரச மரம் ஒன்றின் கிளை அதன் அருகே இருந்த ஓட்டு வீட்டின் மீது விழுந்து, வீட்டில் வசித்து வந்தவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். மேற்கண்ட அரச மரத்தின் கிளைகள் பல்வேறு திசைகளில் படர்ந்து, பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் நிலையில் இருந்ததால், இது தொடர்பாக மாநகராட்சியில் பலமுறை புகார்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட அரச மரத்தின் பக்கத்தில் அங்கன்வாடி மழலையர் பள்ளி ஒன்றும் உள்ளதால், அசம்பாவிதம் ஏதும் ஏற்படுவதற்கு முன் மேற்கண்ட அரச மரத்தின் கிளைகளை வெட்டிட தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

4) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலைப் பொறியாளர் மற்றும் பூங்கா பணிப்பார்வையாளர் ஆகியோர், 01.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள் :

"சென்னை கொருக்குப்பேட்டை, ஜீவா நகர் 16வது தெருவில் உள்ள அரசமரம் ஒன்றின் கிளை விழுந்துள்ளதாகவும், அதன் அருகில் மழலையர் பள்ளி உள்ளதால், அதனை உடனடியாக அகற்றிட வேண்டி மனுதாரர்கள் மனு அளித்திருந்தனர். தனியார் இடத்தில் அமைந்துள்ள மேற்கண்ட அரச மரத்தின் விழுந்த கிளைகள் தீயணைப்பு

வீரர்கள் மூலம் **22.3.2022 அன்றே** வெட்டப்பட்டு, மரக்கழிவுகள் மற்றும் குப்பைகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன. தற்போது, அம்மரத்தின் வேறு கிளைகள் பெரிய அளவில் வளர்ந்துவிட்டதாக மனுதாரர்கள் புகார் அளித்துள்ள நிலையில், அக்கிளைகளையும் **இன்னும்** ஒருவார காலத்திற்குள் மாநகராட்சியால் அகற்றப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

முறையீட்டு மனுதாரர்களின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

22.3.2022 அன்று முறிந்து விழுந்த மரக்கிளை மற்றும் குப்பைகள் தீயணைப்பு அலுவலர்களின் உதவியுடன் அகற்றப்பட்டதாக தெரியவருகிறது. பின்னர், மேலும், மோசமாக முறிந்து விழும் நிலையில் உள்ள பிற மரக்கிளைகளையும் அகற்றக்கோரி மனுதாரர்கள் மண்டல அலுவலர் முதல் சம்பந்தப்பட்ட அனைத்து மாநகராட்சி அலுவலர்களையும் எழுத்து மூலமும், நேரிலும் வலியுறுத்தியும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல், மனுதாரர்கள் இம்முறைமன்றத்திற்கு தீர்வு காணக்கோரி மனுச் செய்த பின்னர் விசாரணை நாளான இன்றுதான் **(1.6.2022)**, மாநகராட்சி அலுவலர்கள் அப்பகுதிக்கு நேரில் சென்று நடவடிக்கை மேற்கொண்டதும் அறியமுடிகிறது. மேலும், **"Chennai City Municipal Corporation Act, 1919"**, பிரிவு 259-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விழைகிறது.

**"Precautions in case of dangerous trees,-** (1) If any tree or any branch of a tree or the fruit of any tree be deemed by the commissioner to be likely to fall and thereby to [endanger any person or any structure], the commissioner may, by notice, require the owner of the said tree to secure, lop or cut down the said tree so as to prevent any danger therefrom.

(2) If immediate action is necessary, the commissioner may himself, before giving such notice or before the period of notice expires secure, lop or cut down the said tree or remove the fruit thereof or fence off a part of any street or take such temporary measures, as he thinks fit to prevent danger, and the cost of so doing shall be recoverable from the owner of the tree in the manner provided in section 387."

மிக ஆபத்தான நிலையில், உயிர் சேதம் விளைவிக்கக்கூடிய நிலையில் உள்ள மரக்கிளைகள் ஒட்டு வீட்டின் மீதும், பால்வாடியின் மீதும் விழுந்தால் மிகப்பெரிய உயிர்ச் சேதம் ஏற்படக் கூடும்.

மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி, மாநகராட்சி அலுவலர்கள் விரைவாக செயல்படாமல், பால்வாடியில் உள்ள குழந்தைகளுக்கு ஏதேனும் ஆபத்து நேரிடும் என்பதையும் கருத்தில் கொள்ளாமல் மிகுந்த மெத்தனப்போக்குடன் செயல்பட்டு, மனுதாரர்கள் இம்முறைமன்றத்தை நாடிய பின்னர், அப்பகுதிக்கு சென்று செயல்படுவது சரியல்ல என இம்முறைமன்றம் கருதுகிறது. சம்பந்தப்பட்ட கள அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது. இதைப்போன்ற அடிப்படை பாதுகாப்புப் பணிகளில் சுணக்கம் காட்டும் பகுதி அலுவலர்கள் குறித்து எச்சரிக்கவும், சுற்றறிக்கை அனுப்பவும், சென்னை மாநகராட்சி ஆணையர் கோரப்படுகிறார்.

ஆகவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்து சென்று, சட்டப்படியான உரிய விதிமுறைகளைப் பின்பற்றி யாருக்கும் எவ்வித உயிர்ச் சேதமோ, பொருட்சேதமோ இல்லாமல் மனுதாரர்கள் குறிப்பிடும் முறிந்து விழக்கூடிய நிலையில் உள்ள அனைத்து மரக்கிளைகளையும் விசாரணையின் போது இம்முறைமன்றத்தில் உறுதியளித்தபடி ஒருவார காலத்திற்குள்ளாக அகற்றவேண்டும் என்று இம்முறைமன்றம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 4ன் மண்டல அலுவலருக்கு ஆணையிடுகிறது. மேலும், அதற்குள்ளாக, மரக்கிளைகள் விழுந்து உயிரிழப்புக்கள் ஏதேனும் ஏற்படுமானால், அந்த உயிர் இழப்புகளுக்கு சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் முதல் அனைத்து அலுவலர்களையும் பொறுப்பானவர்களாக்கி, நடைமுறையில் உள்ள உரிய சட்ட விதிகளின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இம்முறைமன்றம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்கிறது.

2022–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2) திரு. M. அன்பரசன்,
த/பெ. மனோகரன்,
எண்.309, 16வது தெரு, ஜீவா நகர்,
கொருக்குப்பேட்டை, சென்னை – 600 021.
3) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4) மண்டல அலுவலர்,
மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை – 600 021.
5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

03/06/22

செயலாளர்.

8/6/2022